## தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை - 2013

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, மூலதன மாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை சட்டம் மற்றும் 1996 இன் 32 ஆம் இலக்க திருத்திய அதிகாரச்சட்டத்தின் 25(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் முகவராண்மையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி முகவராண்மையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தரும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

படகுகள் மற்றும் கப்பல்கள் என்பவற்றிற்காக செலவிடப்பட்ட மீண்டுவரும் செலவினமொன்றை முன்னைய ஆண்டில் மூலதனமாக்கி அதற்காக பெறுமனத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்ட தொகை சரி செய்யப்பட்ட போதிலும், மிகையான பெறுமானத் தேய்வு ஏற்பாடு ரூபா 514,234 சீராக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடுவதற்கு உள்ள கடன்மீதிகளின் பெறுமதி ரூபா 26,132,204 ஆகக் காணப்பட்டதுடன், 03 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த கடன்மீதிகளின் பெறுமதி ரூபா 2,728,665 ஆகக் காணப்பட்டது.

(ஆ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்துவதற்கு உள்ள கடன்மீதிகளின் பெறுமதி ரூபா 16,852,620 ஆகக் காணப்பட்டதுடன், ஓராண்டிற்கு மேல் பழைமைவாய்ந்த கடன்மீதிகளின் பெறுமதி ரூபா 244,593 ஆகக் காணப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1996 இன் 32 ஆம் இலக்க தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை (திருத்திய) அதிகாரச்சட்டம் | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்குப் புறம்பாக மீன் விற்பனை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 7,916,832 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(2) | பெற்றுக்கொண்ட முற்பணத்தை குறித்த செயற்பாடு முடிவுற்ற உடனேயே தீர்த்து வைக்க போதிலும், 14 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 213,243 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 454 மற்றும் 751 | சகல பொருட்களும் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 1,278 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக பதிவேடொன்று நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 ஏப்ரல் 10 ஆம் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமல் ரூபா 650,000 மதியுரைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | ரூபா 7,013,457 பெறுமதியான கணனி மற்றும் கணனி மென்உறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 120,061,820 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 93,909,305 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 26,152,515 பற்றாக்குறையில் அதிகரிப்பான்றைக் காட்டியது. இதற்காக பிரதானமாக சம்பளம், பிரயாணச் செலவினம், ஒப்பந்தச் சேவைகள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினங்களில் அதிகரிப்பு என்பன காரணங்களாக அமைந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2009 முதல் 2013 வரை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினங்களுக்காகப் பெறப்பட்ட மானியங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,334 மில்லியனாக இருந்ததுடன், அதற்காக செலவிடப்பட்ட செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 242 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினங்களுக்காகப் பெறப்பட்ட மானியங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினம் 18 சதவீதமாக இருந்தது.

### 4.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மூலதனச் செலவினமாக கிடைத்த தொகையில் ரூபா 20,027,819 ஐ அந்நடவடிக்கைகளுக்காக செலவு செய்யாமல் மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவினங்களுக்காகப் செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) கரையோர வலயத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படக் கூடியவகையில் ரூபா 15,685,633 தொகையான செலவில் தயாரிக்கப்பட்டிருந்த படகொன்று இதுவரை ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், படகில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்காக சம்பளங்கள், மேலதிகநேரக் கொடுப்பனவுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பவற்றிற்காக ரூபா 4,427,117 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சம்பளம், பிரயாணச் செலவினம், சில்லறைக் காசு மற்றும் விசேட முற்பணமாக ரூபா 333,891 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அத்தொகையை தீர்த்துக் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 5,750,000 மதிப்பீட்டுப் பெறுமதியான 04 வாகனங்கள் ஓராண்டிற்கும் மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது நிறுவக வளவில் செயற்பாடற்று காணப்பட்டன.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 272,160 தொகை செலவிடப்பட்டு மென்பொருள் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அம் மென்பொருள் இதுவரையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உத்தேச உணவகம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 855,938 செலவிடப்பட்டிருந்த போதிலும் இந் நிர்மாணிப்புகள் இரு ஆண்டுகளுக்கும் மேலான காலமாக கைவிடப்பட்டிருந்தன.

(ஈ) முறையான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளாமல் ரூபா 4,493,052 பெறுமதியான (HP 200) இரண்டு படகு இயந்திரங்கள் இரு ஆண்டுகளுக்கும் மேலான காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 முறையாகப் பொறுப்பேற்கப்படாத காணிகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

பேருவளை நகரத்திற்கு அண்மித்த காணியொன்றில் மீன் விற்பனை நிலையமொன்றையும் கடல்சார் அவதானிப்பு மற்றும் சுனாமி நிலையமொன்றையும் நிர்மாணிப்பதற்காக ரூபா 14,502,760 தொகைக்கு ஒப்பந்தங்களை மேற்கொண்டு மீளாய்வாண்டில் அதற்காக ரூபா

6,532,047 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அக்காணியை முகவராண்மைக்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை முறையே 443 மற்றும் 308 ஆக இருந்ததுடன் வெற்றிடமான பதவியணியினர் எண்ணிக்கை 122 ஆக இருந்தன.

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 3,329,908 கிரயத்திலான இரண்டு படகுகள் குறித்த தரத்தில் நிர்மாணிக்கப்படாமையால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமால் இருந்ததுடன், அப்பெறுமதி நடைமுறை வேலையாக நடைமுறையல்லாத சொத்தின் கீழ் தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளக கணக்காய்வினை தாபித்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக போதிய பதவியணியினர் நியமிக்கப்படாமல் இருந்ததுடன், தலைமைக் அலுவலகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உதவி உத்தியோகத்தர்களின் பதவிகளை உள்ளடக்கும் வகையில் பதவியணி ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவியணியினர் பற்றாக்குறை காரணமாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் தேவைப்பாட்டின் பிரகாரம் திட்டமிடுவதற்கும் பராமரிப்பதற்கும் முடியாதிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் பாதீட்டு எண்ணிக்கைக்கும் உள்ளவாறான எண்ணிக்கைக்கும் இடையே கருத்திற் கொள்ளக்கூடியளவில் விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது முகவராண்மையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) மனிதவள முகாமைத்துவம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கணக்கீடு
(ஊ) முற்பணம்